முருகப்பெருமான் துணை

**மகான் உருத்திரபசுபதி நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**26.09.2023**,செவ்வாய்கிழமை

1. வரம் தரும் ஞான குருவே
வள்ளலே வாழும் ஞானியே
அறம்தனை உலகே வியக்க
அற்புதம்பட செய்யும் தவசியே
2. தவசியே ஆறுமுக அரங்கனே
தரணியில் உன் பெருமை கூறி
அபயமென சோபகிருது தரிவை திங்கள்
அறிவிக்க நவ திகதி குசன்வாரம்
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 09 ம் நாள், 26.09.2023, செவ்வாய்கிழமை)
3. வாரமதில் அறிவுரை ஆசிதனை
வள்ளலுக்கு உருத்திரபசுபதி நாயனாரும்
சோரமில்லா ஞானஉலகம் அமைய உரைப்பேன்
சுத்த நெறி முறைகள் தனை ஏற்று
4. ஏற்றுமே கலியுக மக்கள்
ஏழாம்படைவீடு நோக்கி வர
ஆற்றல்பெற அரங்கமகானிடம்
அடிப்படை அனைத்து தீட்சை களும்
5. தீட்சைகளும் அடைந்து நன்கு
தேசிகனார் அருமை பெருமைதனை
தட்டாது அறிந்து உணர்ந்து மக்கள்
தான தருமங்களை ஏற்று வருக
6. வருகவே மக்களிடையே மாற்றம்
வள்ளலாக ஞானத்தன்மையாக
தரும பலமாகவே மாறி இனிதே
தரணியோர் மேன்மைநிலை அடைவர்

7. அடையவே அகிலம் எங்கிலும்
அரங்கன் தொண்டர்படை
படைகளும் அளவிலாப் பெருகி
பாருலகில் அற்புதம் நிகழும்
8. நிகழவே எங்கும் அரங்கமகான்
நிழலாக கலியுக மக்கள்
வகைபட சக்திபலம் கூடி
வையகத்தில் அற்புதம் படைப்பர்
9. படைக்கவே சன்மார்க்க நெறி
பழுதின்றி பட்டி தொட்டியெல்லாம்
தடையற ஏற்பு நிலை கூடி
தவராஜன் வெளிப்பாடு உறுதி ஆகும்
10. ஆகவே பிரணவக்குடிலின் வகை
ஆற்றல் எங்கும் நிரம்பி
வகைபட உலக மாற்றம்
வரமாக நடந்தேறும் என்பேன்
11. என்கவே ஞானத் தலைமை
இணையில்லா ஞானிகள் ஆட்சி
நன்மைபட சடுதி அமையும்
நாட்டிய அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–